# வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
## ந.க.எண் 4723 /ஆ5/2024, நாள். 22/01/2025

.....

பொருள் பள்ளிக் கல்வி – தேசிய பெண் குழந்தைகள் தினம் ஜனவரி 24 அன்று அனுசரிக்கப்படுகிறது – அறிவுரைகள் வழங்குதல் – சார்பு

பார்வை
1. அரசாணை நிலை (1டி) எண். 83, பள்ளிக் கல்வித் துறை நாள். 17.06.2021
2. சென்னை-6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.69199 /எம்2/இ2/2024, நாள். 20.01.2025

•••••

பார்வை 2-ல் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளுக்கிணங்க, தேசிய பெண் குழந்தைகள் தினம் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 24 ஆம் நாள் அனுசரிக்கப்பட்டு வருகின்றது. அன்றைய தினத்தில் பெண் குழந்தைகளின் கல்வி, பாதுகாப்பு, உடல் நலன் சார்ந்து சில விழிப்புணர்வு செயல்பாடுகளை நடத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. பள்ளித் தலைமையாசிரியர் அல்லது ஏதேனும் ஒரு குழு பொறுப்பு ஆசிரியர் (House Head Teacher) "மாணவர் மனசு" திட்டம் சார்ந்து விளக்க உரை காலை வணக்கக் கூட்டத்தில் இடம் பெற வேண்டும்.
2. மாணவர் பாதுகாப்பு ஆலோசனை குழு (Student Safeguarding Advisory Committee) பள்'ளி அளவிலான குழுவில்
   - தலைமையாசிரியர்
   - ஆசிரியர்கள் – 2
   - பெற்றோர் ஆசிரியர் கழகம் / பெற்றோர் உறுப்பினர் – 2
   - பள்ளி மேலாண்மை குழு பிரதிநிதி – 1
   - ஆசிரியரல்லா பணியாளர் – 1
   - வெளி நபர் (தேவை எனில் ) – 1

இடம் பெற்றுள்ளனர். இக்குழு கூட்டத்தினை 24.01.2025 நடத்தி அறிக்கை மாவட்ட மாவட்ட கல்வி அலுவலருக்கு தலைமையாசிரியர்கள் அனுப்பிட வேண்டும். "மாணவர் மனசு" பெட்டியில் பெறப்படும் கோரிக்கைகள் மற்றும் புகார்களை இக்கூட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்ட விவரங்களுடன் விவாதித்தல் வேண்டும். உரிய நடவடிக்கையினையும் மேற்கொள்ள வேண்டும். பள்ளிகளிடமிருந்து பெறப்பட்ட அறிக்கையினை தொகுத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்) இவ்வலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.

3. பதிவேட்டில் உரிய விவரங்களை பதிந்து பின்வரும் படிவத்தில் அறிக்கை அவ்வப்போது மாவட்டக கல்வி அலுவலருக்கு அனுப்பிட வேண்டும். மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்) அதனை தொகுத்து இவ்வலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.

மாணவர் பாதுகாப்பு ஆலோசனை குழு

**(மாணவர் மனசு பெட்டிகள் மூலம் பெறப்பட்ட கோரிக்கைகள் விவரம்)**

பள்ளியின் பெயர் –

| வ. எண். | நாள். | திறக்கப்பட்ட நேரம் | பெறப்பட்ட மனுக்கள் எண்ணிக்கை | கோரிக்கை விவரம் | எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரம் |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

(குறிப்பு – மேற்காண் விவரங்கள் 14417 எண்ணிலிருந்து பெறப்படும் புகார்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரமும் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும்.)

4. மாணவர் பாதுகாப்பு ஆலோசனை குழு பள்ளியில் பாலியல் புகார் சார்ந்து ஏதேனும் தகவல் பெறப்படின் அதனை உடனடியாக 14417, 1098 ஆகிய எண்ணை தொடர்பு கொண்டு தகவல்களை அளித்தல் வேண்டும்.
5. மாணவர்களிடையே குழந்தைகள் உதவி மையம் எண். 1098 மற்றும் 14417 ஆகிய எண்கள் சார்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல் வேண்டும்.
6. இணையதள பாதுகாப்பு – மாணவர்கள் இணையதளத்தில் உள்ள தகவல்களை பாதுகாப்பாக எவ்வாறு கையாளுவது மற்றும் இணையதள பாலியல் வன்முறைகளை தவிர்ப்பது எவ்வாறு என்பது சார்ந்து மகிழ் முற்றம் செயல்பாடாக குழு வாரியாக விவாதம் நடத்தி குழுத் தலைவர்கள் கருத்து கண்காட்சி வகுப்பறையில் காட்சிப்படுத்துதல்.
7. அரசின் நலத்திட்டங்கள், பாடத்திட்டங்கள், தேர்வு முறைகள் மற்றும் மேற்படிப்பு சார்ந்த விவரங்கள், வளரிளம் பருவத்தினருக்கான மனநிலை சார்ந்த அறிவுரைகள், தேர்வுக்காக தயார்ப்படுத்துதல், தேர்வை எதிர்கொள்வது மற்றும் தேர்வு முடிவுகள் குறித்த பயத்தை போக்குதல் போன்ற தகவல்கள், ஆலோசனைகளை 14417 இலவச அழைப்பு மைய எண் வாயிலாக பெற்றோர்கள், மாணவர்கள் மற்றும் பொது மக்கள் அறிந்து கொள்ள முடியும் என்பது குறித்து மாணவர் பாதுகாப்பு ஆலோசனை குழுவில் அவசியம் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

8. பள்ளியில் குழந்தைகள் பாதுகாப்பு கையேடு நகல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகின்றது. இதில் அனைவரின் பொறுப்புகள் சார்ந்து உள்ள விவரங்களை குழுவில் விவாதித்திட வேண்டும்.
9. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள (Posters) சுவரொட்டிகள் நகலினை மாணவர்கள் அறியும் வண்ணம் வகுப்பறைகளில் இடம்பெறச் செய்திடவும் அறிவுறுத்தப்படுகிறது.

பள்ளித் தகவல் பலகையிலும் / வகுப்பறைகளிலும் பள்ளிக் கல்வித் துறையின் மாணவர் உதவி எண். 14417 மற்றும் 1098 குழந்தைகளுக்கான அவசர உதவி எண்ணினை எழுதிடவும் தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்திட மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. இவ்விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் சார்ந்து இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் விவரங்களை 31.01.2025-க்குள் அறிக்கையாக அளிக்க மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்) கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு -

1. படிவங்கள்
2. கையேடு

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் -

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
(இடைநிலை / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்) வேலூர் மாவட்டம்.
(இவ்வலுவல மின்னஞ்சல் மூலமாக)
2. தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள்,
அனைத்து வகை பள்ளிகள், வேலூர் மாவட்டம்.
(சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர் மூலமாக)

நகல்.

1. சென்னை -6, பள்ளிக் கல்வி இயக்குநர்
அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. உதவி திட்ட அலுவலர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, வேலூர் மாவட்டம்.